ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1855/40 - 2014 මාර්තු මස 27 වැනි බ්‍රහස්පතින්දා - 2014.03.27

*1855/40 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

*எனது இல : 01/10/03/04*

**ஊவா மாகாண மாகாண சபை**

*ஊவா மாகாண ஆளுநரினால் செய்யப்பட்ட நியமனங்கள்*

*ஊவா மாகாணத்தின் ஆளுநர் கௌரவ சீ. நந்த மெத்தியு அவர்களால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதனை இதன் மூலம் அறிவிக்கின்றேன்.*

1. *ஊவா மாகாண வீதி பணிப்பாளர் திரு. ஏ. ஏ. பீ. எஸ். கே. கருணாரத்ன அவர்கள் 2013.12.13 ஆந் திகதி முதல் 2013.12.16 ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2013.12.13 ஆந் திகதி முதல் அவர் மீள தீவிற்கு திரும்பும்வரை, இலங்கை பொறியியலாளர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. டி. சந்திரதிலக அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக ஊவா மாகாண வீதிப் பணிப்பாளர் பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு,*

2. *விசேட வைத்தியர் திரு. ஐ. என். டபிள்யூ. ஆனந்தகொட அவர்கள், 2013.11.09 ஆந் திகதி முதல் 2013.12.04 ஆந் திகதி வரை தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக மஹியங்கன ஆதார வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாக பதிற்கடமையாற்றுவதற்கு,*

3. *இலங்கை கல்வி நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் திரு. எஸ். நடராஜா அவர்கள், 2013.11.01 ஆந் திகதி முதல் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை அல்லது 2014.04.30 ஆந் திகதி ஆகியவற்றில் முன்தோன்றும் திகதி வரையில் மட்டும் பண்டாரவளை வலயக் கல்வி காரியாலயத்தின் பிரதி கல்விப் பணிப்பாளராக ஒப்பந்த அடிப்படையில் மீள பணி ஆற்றுவதற்கு,*

4. *இலங்கை நிர்வாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி ஆர். ஏ. எச். ஏ. சமரசிங்க அவர்கள், 2014.01.01 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் ஊவா மாகாண சபையின் சபைச் செயலாளராக கடமையாற்றுவதற்கு,*

5. *இலங்கை நிர்வாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. டபிள்யூ. எம். எம். ஜீ. அபேசிங்க பண்டா அவர்கள், 2014.01.01 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக ஊவா மாகாண சபையின் பிரதி தலைமைச் செயலாளராக (ஆளணி/பயிற்சி) பதிற்கடமையாற்றுவதற்கு,*

6. *இலங்கை கமத்தொழில் சேவையின் II ஆம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. ஜீ. ஏ. ஆரியசேன அவர்கள், 2013.11.21 ஆந் திகதி முதல் பிந்துனுவெவ தொழில் பயிற்சி நிறுவனத்தின் பிரதி கமத்தொழில் பணிப்பாளர் (பயிற்சி) பதவியின் பணிகளை முழுநேர அடிப்படையில் கடமையாற்றுவதற்கு,*

7. இலங்கை திட்டமிடல் சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. அஜித் திசாநாயக அவர்கள், 2012.02.01 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் ஊவா மாகாண கைத்தொழில் பணிப்பாளராக பதிற் கடமையாற்றுவதற்கு,

8. இலங்கை கணக்காளர் சேவையின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் திரு. டபிள்யூ. எம். அத்தநாயக அவர்கள், 2014.01.28 ஆந் திகதி முதல் பிரதி தலைமைச் செயலாளராக (நிதி) நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை அல்லது 2015.01.27 ஆந் திகதி ஆகியவற்றில் முன்தோன்றும் திகதி வரையில் மட்டும் பிரதி தலைமைச் செயலாளராக (நிதி) ஒப்பந்த அடிப்படையில் மீள் பணி ஆற்றுவதற்கு,

9. ஊவா மாகாண வீதி பணிப்பாளர் திரு. ஏ. ஏ. பீ. எஸ். கே. கருணாரத்ன அவர்கள், 2014.02.02 ஆந் திகதி முதல் 2014.02.17 ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2014.02.02 ஆந் திகதி முதல் அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை, இலங்கை பொறியியலாளர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. டி. சந்திரதிலக அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக ஊவா மாகாண வீதி பணிப்பாளர் பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு,

10. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் திரு. எச். எம். சுதுபண்டா அவர்கள், 2014.02.08 ஆந் திகதி முதல் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை அல்லது 2014.08.07 ஆந் திகதி ஆகியவற்றில் முன்தோன்றும் திகதி வரையில் மட்டும் ஊவா மாகாண கல்வி திணைக்களத்தின் உதவி கல்விப் பணிப்பாளராக ஒப்பந்த அடிப்படையில் மீள பணியாற்றுவதற்கு,

11. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் திரு. எஸ். டி. அபயகோன் அவர்கள், 2014.02.10 ஆந் திகதி முதல் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை அல்லது 2014.12.31 ஆந் திகதி ஆகியவற்றில் முன்தோன்றும் திகதி வரையில் மட்டும் ஊவா மாகாண கல்வி திணைக்களத்தின் பிரதி கல்விப்பணிப்பாளராக ஒப்பந்த அடிப்படையில் மீள பணியாற்றுவதற்கு.

எச். எம். சோமதிலக,
ஊவா மாகாண ஆளுநரின் செயலாளர்.

ஆளுநரின் அலுவலகம்,
இராஜ வீதி,
பதுளை.

4- 348

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.